வரையறுக்கப்பட்ட டிஸ்ரன்ஸ் லோ்னிங் சென்ரர் கம்பனியின் ("கம்பனி") 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பொதுத்துறையிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றின் மூலம் இந்த கணக்காய்வினை மேற்கொள்வதற்கு நான் உதவியைப் பெற்றிருந்தேன்.

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரைக்கமைய இந்த அறிக்கை வழங்கப்பட்டது.

## 1.1 கம்பனியின் ஸ்தாபிப்பு மற்றும் உரிமைத்துவம்

கம்பனியானது 1982 இன் 17 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் கீழ் 2001 நவம்பர் 01 ஆம் திகதி கூட்டிணைக்கப்பட்டதுடன் 2002 மார்ச் 26 ஆம் திகதி அதன் செயற்பாடுகளை ஆரம்பித்திருந்தது. இது முழுமையாக அரசாங்கத்திற்குச் சொந்தமான ஒரு கம்பனியாகவும் திறைசேரிச் செயலாளர் கம்பனியின் தனியான பங்குதாரராகவுள்ளார்.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களிற்கான (எஸ்எம்ஈஎஸ் இற்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை ("சபை") பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். எனது கணக்காய்வினை இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொண்ட

கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

எனது அபிப்பிராயத்தில், 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களிற்கான (எஸ்எம்ஈஎஸ் இற்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

#### 2.1.1 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு உள்ளன.

(ஆ) எனது அபிப்பிராயத்தில் :

- கணக்காய்விற்கு அவசியமானதும், இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுவதும், முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் கம்பனியால் வைத்திருக்கப்படுகின்றமை போன்ற எல்லா தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றிருக்கின்றேன் என்றும்,

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் கம்பனியானது நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் தொழிற்பாடுகளிலிருந்தான வரிக்கு முன்னரான அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான வரிக்கு முன்னரான தேறிய இலாபம் ரூபா 6,546,415 உடன் ஒப்பிடும் போது ரூபா 7,841,919 ஆன தேறிய இலாபத்தை விளைவித்திருந்தமையால் மீளாய்வாண்டின் போது நிதிசார் விளைவுகளில் ரூபா 1,295,504 ஆன முன்னேற்றத்தினைச் சுட்டிக்காட்டுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது கணனி அடிப்படையிலான பயிற்சி வசதிகள் மற்றும் நேர்க்கு நேர் பயிற்சி வசதிகளுடன் தொடர்புடைய அதிகமான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டமையின் விளைவாக வருமானத்தின் அதிகரிப்பு ஏற்பட்டமை நிதிசார் விளைவுகளில் ஏற்பட்ட இந்த முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாக காணப்பட்டன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

உயர்கல்வியை மேம்படுத்தலை நோக்கமாகக் கொண்டு உயர்கல்வி நிலையம் ஒன்றை நிறுவுதல் மற்றும் தொலைநோக்குக் கற்றல் நிகழ்ச்சித்திட்டங்களினூடாக அறிவினைப் பகிர்ந்து கொள்ளல், உலக தொலைநோக்கு கற்றல் வலைப்பின்னலைப் பயன்படுத்தி தனியார் மற்றும் பொதுத்துறை ஊழியர்களுக்கு வசதியளிப்பதற்கு நிறுவனங்களுக்கு நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள், பயிற்சிப் பட்டறைகள், மாநாடுகள் மற்றும் ஏனைய நடவடிக்கைகளை ஒழுங்கமைத்தலும் நடாத்தலும் ஊழியர்களின் பயிற்சி மற்றும் அபிவிருத்திக்காக பொது நிறுவனங்களுக்கு தேவைப்படும் தொழில்நுட்ப, முகாமைத்துவ மற்றும் ஏனைய வடிவில் தேவைப்படும் உதவிகளை வழங்குதல், மற்றும் நிலையத்தினால் நடாத்தப்படுகின்ற கற்கைகள், பயிற்சிப் பட்டறைகள், கருத்தரங்குகள் மற்றும் ஏனைய நிகழ்ச்சிகளை பின்பற்றியவர்களுக்கு டிப்ளோமா, சான்றிதழ்கள் மற்றும் ஏனைய விருதுகளை அழித்தல் என்பன கம்பனியின் பிரதான நோக்கங்களாகும்.

இக் குறிக்கோள்களை அடைவதை பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கம்பனியின் பிரதான செயற்பாடுகள் மீதான பௌதீக மற்றும் நிதிசார் இலக்குகளினைக் காட்டக்கூடியவாறு மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்காதுடன் அதற்குப் பதிலாக 2016 ஆம் ஆண்டிற்கு தயாரிக்கப்பட்ட வருடாந்த அறிக்கையில் பாதீடொன்றும் அடைவுகள் அறிக்கையொன்றும் உள்ளாக்கப்பட்டிருந்தது.

(ii) 2016 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் ஒவ்வொரு வருமான வகையின் கீழ் நடாத்தப்பட வேண்டிய நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கையினை கம்பனி எதிர்வு கூறியிருக்கவில்லை.

(iii) கணக்காய்விற்கு கிடைக்கக் கூடியதாகவுள்ள பாதிடப்பட்ட வருமானக் கூற்று மற்றும் ஏனைய தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டின் போது இலக்கிடப்பட்ட இலாபம் மற்றும் அவற்றின் மீதான அடைதல்கள் கீழே காட்டப்பட்டு இருக்கின்றன.

| ஆண்டு | இலக்கு | உண்மை | இலக்குகளின் சதவீதமொன்றாக அடைவுகள் |
|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | |
| 2016 | 8,773,046 | 7,841,919 | 89.3 |
| 2015 | 7,994,394 | 6,546,415 | 81.8 |

முன்னைய ஆண்டில் மற்றும் மீளாய்வாண்டில் இலக்கிடப்பட்ட இலாபத்தினை அடைவதற்கு கம்பனி தவறியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் குறைபாடுகள் காலத்திற்கு காலம் கம்பனியின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் (சீஈஓ) மற்றும் கம்பனியின் நிதித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அறிக்கைகளுக்கிடையே குறிப்பிடத்தக்களவு வித்தியாசங்கள் அவதானிக்கப்படாமையினால் பிரிவுகளுக்கிடையேயான ஒருங்கினைப்பு தொடர்பில் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.